# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## பிரதான அலுவலக சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்வதற்கான விலைமனு கோரல்

## PR/02/01-01

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2026-09-07ஆம் திகதி முதல் 2026-09-28ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 2ஆம் மாடி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், பெறுகை முகாமையாளரிடமிருந்து தொலைபேசி: 011–2887585 மின்னஞ்சல் : mgr_procurement@slbfe.lk ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறிய முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் 2026-09-07ஆம் திகதி முதல் 2026-09-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபாவைச் (ரூபா. 5,000.00) செலுத்தி வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முகாமையாளருக்கு (பெறுகை) நிறுவனக் கடிதத் தலைப்பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு ரொக்கப் பணமாக மாத்திரமே மேற்கொள்ளலாம்.
4. விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு தமது வேண்டுகோள் சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதியுடன் நகல் பிரதியொன்றை விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் மீளளிக்கப்படும். மேலும் இலங்கை தரங்கள் நிறுவனத்தினால் உணவுப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட சிறந்த முடிவுறுத்தல் பரிச்சயம் பற்றிய சான்றிதழை (Certificate of Good Manufacturing practice for food safety) சமர்ப்பித்தல் விசேட தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
5. விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் இந்தப் பெறுகைக்கான தகுதியைப் பெறுவதற்கு விலைமனு ஆவணங்களில் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘தலைமை அலுவலகத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் - PR/02/01-01’’ என அடையாளமிட்டு 2ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2026-09-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப் பெட்டி மூடப்படும் என்பதுடன் அதன் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். தாமதமாகி கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. சகல விலைமனுக்களுடனும் மொத்த விலைக்கோரல் ஐம்பதாயிரம் இலங்கை ரூபாவிற்கான (50,000.00) விலைக்கோரல் பிணை முறி இருக்க வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
8. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதுடன் எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினத்திற்கும் அக்குழு பொறுப்பேற்கமாட்டாது.

**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி / தொலைநகல் : 011 2887585 / 011 2880564**
**மின்னஞ்சல் : mgr_procurement@slbfe.lk**